**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | திரு. பிரேம்குமார் |
| Father's Name/Husband Name: | திரு. முருகேசன் |
| Village : | கூத்தனூர் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 23 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி ஆஜர்,)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூர் தங்கமயில் ஜீவல்லரியில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 புஷ்பராணியை தெரியும். எதிரி ராஜகுமாரை தெரியும். சம்பவம் நடந்து இத்துடன் 4 வது வருடம் ஆகிறது. கடந்த 31.07.2021 அன்று அ.சா.1 புஷ்பராணி 100 நாள் வேலைக்காக சென்று கொண்டிருந்த போது எதிரி ராஜ்குமார் அ.சா.1ஐ பைக்கில் டிராப் செய்வதாக சொல்லி அழைத்து சென்றதாகவும், போகும் வழியில் குறுக்கு பாதையில் அ.சா.1 அழைத்து சென்றதாகவும், அது குறித்து அ.சா.1 கேட்டதற்கு இலை பறிக்கவேண்டும் என்றும், எதிரியின் அம்மா கேட்டதாகவும் சொல்லி அ.சா.1யை அழைத்து சென்றுள்ளார். எதிரி அ.சா.1யிடம் தவறாக நடந்து கொண்டதாகவும், முத்தம் கொடு என்று சொல்லி தவறாக நடந்து கொண்டதாகவும், அ.சா1 புஷ்பராணி கத்திக்கொண்டு ஓடி வந்ததாக உடன் வேலை பார்த்தவர்களிடம் சொல்லியுள்ளார். எனக்கு எனது சித்தப்பா செல்லதுரை சொல்லி

சம்பவம் குறித்து தெரியும். இது சம்மந்தமாக அ.சா.1 புஷ்பராணி புகார் அளித்தார். அவர் கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 புஷ்பராணி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது சித்தி உறவுமுறை. வழக்கு பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது சித்தி 100 நாள் வேலை செய்தவர்களிடம் சம்பவம் குறித்து சொன்னார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது சித்தப்பா சொல்லி தான் எனக்கு தெரியும். சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் அப்படி சம்பவம் நடைபெற்றிருந்தால் 100 நாள் வேலை செய்த நபர்கள் யாரையாவது சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது சித்தி கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.